**சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை.**

**O.S.No: 209/2022** **தேதி: 06.03.2026**

**வா.சா. 3 – ராஜசேகர்**

**8 முதல் 10 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை :**

பொதுவாக ஒரு சொத்திற்கான நான்கு மால் கிராம நிர்வாக அதிகாரி வரைந்து குறியீடு செய்வாரா அல்லது வேறு அதிகாரி குறியீடு செய்வாரா என்றால் கிராம நிர்வாக அதிகாரி வரைந்து குறியீடு செய்வதில்லை. ஒரு சொத்தை பதிவு செய்யும் போது கிராம நிர்வாக அதிகாரி நான்கு மால் விபரம் பற்றிய சான்று கொடுப்பார் என்றால் இல்லை. சொத்திற்கான நான்குமால் யார் குறியீடு செய்வார்கள் என்று எனக்கு தெரியாது. ஒரு சொத்தின் நான்கு மால் எங்கள் அலுவலகத்தில் உள்ள சொத்தின் ஆவணங்களின் படி சொல்வோம் என்றால் சரிதான். தாவா சொத்தான சர்வே 108/2 முன்னால் யார் பெயரில் இருந்தது என்றால் திருப்பதி மகன் கணபதி பெயரில் இருந்தது. அது இரண்டாக பிரிந்து அதில் 108/2A முத்து மகன் பாண்டி பெயரில் உள்ளது. சர்வே எண். 108/2B திருப்பதி மகன் கணபதி பெயரில் உள்ளது. சர்வே எண் 108/2A ஆவணத்தில் பழைய சர்வே எண். 108/2 ல் வடமேல்புறம் உள்ளது என்றால் சரிதான். சர்வே எண். 108/2A விற்கான நான்குமால் ஆவணத்தின் அடிப்படையில் சொல்லிவிடலாம். சர்வே எண் 108/2A வில் கிழக்கு பக்கம் 108/2B உள்ளது. தெற்கு பக்கம் 108/2B உள்ளது.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி,
அருப்புக்கோட்டை.

சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை.

OS No.209/2022

2026ம் ஆண்டு மார்ச் திங்கள் 6-ம் நாள் வாதி சாட்சியின் வாக்குமூலம் (1889ம் ஆண்டு சாட்சியச் சட்டம் எண்.44வது பிரிவு 5வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.N.கௌரிமாரியம்மாள் கிரேடு 2 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் - திருவில்லிபாண்டியன் (Pw4) | தொழில் - சிறப்பு சார்பு ஆய்வாளர் |
| த/பெயர் | சமயம் |
| கிராமம் | சாதி |
| தாலுகா | வயது |

<u>முதல் விசாரணை</u>

நான் நரிக்குடி காவல்நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்றத்தில் இருந்து கிடைக்கப்பெற்ற அழைப்பாணையின் பேரில் ஆஜராகியுள்ளேன். அழைப்பாணையில் கோரிய ஆவணங்கள் எங்கள் காவல்நிலைய கோப்பில் இல்லை. அதற்கான அறிக்கை சமர்பித்துள்ளேன். திருச்சுழி தாலுகா டி.வேளாங்குடி கிராமம் எங்கள் காவல்நிலைய அதிகாரத்திற்குட்பட்டது. பொதுவாக எங்கள் அதிகாரத்திற்குட்பட்ட கிராமத்தில் உள்ள பிரச்சனைகளுக்கு காவல்நிலையத்தில் புகார் கொடுக்கலாம் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ 34 ஆவணத்தின் படி எங்கள் காவல்நிலையத்திற்கு அனுப்பப்பட்ட புகார் என்று சொன்னால் பெறப்பட்டுள்ள ஒப்புகை அட்டையின் படி காவல்நிலையத்திற்கு புகார் கொடுக்கப்பட்டுள்ளது. அதற்கான ஆவணங்கள் எங்கள் காவல்நிலைய கோப்பில் இல்லை. வா.சா.ஆ 35 ஆவணம் நரிக்குடி காவல்நிலையத்திற்கு கொடுக்கப்பட்ட 2ம் வாதி தேவராஜ் என்பவரின்

வாக்குமூலம் என்றும், அது பதிவு அஞ்சல் மூலம் எங்கள் காவல்நிலையத்திற்கு அனுப்பப்பட்டது என்றால் தபால் ரசீதின் அடிப்படையில் எங்கள் காவல்நிலையத்திற்கு அனுப்பப்பட்டது என்று தெரிய வருகிறது. மேற்படி வாக்குமூலம் சம்பந்தப்பட்ட ஆவணங்கள் எங்கள் காவல்நிலையத்தில் இல்லை. எங்கள் காவல்நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டு அதன் மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. மேற்படி ஆவணங்கள் பிற்காலத்தில் கிடைத்தால் நீதிமன்றத்தில் கொடுக்க தயாராக உள்ளேனா என்றால் தயராக உள்ளேன்.

**8 முதல் 10 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் தற்போது நரிக்குடி காவல்நிலையத்தில் 17.12.2025 ல் இருந்து சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் மேற்படி புகார் கொடுக்கப்பட்ட கால கட்டத்தில் நரிக்குடி காவல்நிலையத்தில் பணிபுரியவில்லை என்றால் சரிதான். காவல்நிலையத்தில் சட்ட ஒழுங்கு மற்றும் குற்றவியல் சம்பந்தப்பட்ட நடிவடிக்கை தான் எடுக்கப்படும் என்றால் சரிதான். சிவில் மற்றும் சொத்துக்கள் சம்பந்தப்பட்ட பிரச்சனைக்கு காவல்நிலையத்தில் நடவடிக்கை எடுக்க முடியாது. நீதிமன்றம் மூலம் பரிகாரம் தேடிக்கொள்ள வேண்டும். மேற்படி புகாரானது சிவில் வழக்கு என்பதால் காவல்நிலையத்தில் எந்த நடிவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் அது சம்பந்தப்பட்ட ஆவணம் காவல்நிலையத்தில் இல்லை.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி,
அருப்புக்கோட்டை.